# முதன்மை மீள் கொள்வனவு உடன்படிக்கை

இவ்வுடன்படிக்கை பிரதான வணிகராக அதிகாரமளிக்கப்பட்ட இலங்கையின் கூட்டிணைக்கப்பட்ட (பதிவு இல.**) ………………………. நிறுவனத்திற்கும் மற்றும் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை (**) இலங்கையில் உள்ள (இதனகத்துப் பின்னர் “வணிகர்” எனக் குறிப்பீடு செய்யப்படுபவருக்கும், அது அதனுடைய பின்னுரித்தாளர்கள், சாட்டுதல்தாரர்கள் ஆகியோரை உள்ளடக்கியதும்) மற்றும் …………………….... என்ற விலாசத்தில் உள்ள …………………… (தே.அ.அ. இல. ………… (இதனகத்துப் பின்னர் “வாடிக்கையாளர்” எனக் குறிப்பீடு செய்யப்படுவதும், அவருடைய பின்னுரித்தாளர்கள், சாட்டுதல்தாரர்கள் ஆகியோரை உள்ளடக்கியதும்) ஆகிய இருவருக்கும் இடையில் …………….…………….. 2014 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையாகும்.

(ஒவ்வொரு “திறத்தவர்” என்பது “திறத்தவர்கள்” எனவும் கருதப்படும்)

**1. பொருள் கோடல்**

இவ்வுடன்படிக்கையின் நோக்கத்திற்காக கீழே வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள சொற்பதங்கள் பின்வரும் பொருள்களைக் கொண்டதாக அமையும்:

**“விரைவுபடுத்தல் திகதி”** என்பது, உடன்படிக்கையின் நியதிகளுக்கு அமைவாக முடிவுறுத்தல் அறிவித்தலின் விளைவாக ஏற்படக்கூடிய அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் நிகழும் அத்தகைய முடிவுறுத்தல் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட மீள் கொள்வனவுத் திகதி எனப்படும்;

**“வங்குரோத்து செயல்”** என்பது, ஒரு திறத்தவர் தொடர்பாக (i) சாதாரண வியாபார நடவடிக்கையின் போது செலுத்தப்பட வேண்டிய அதன் கடன்களைச் செலுத்த ஒரு திறத்தவருக்கு இயலாத போது; (ii) திறத்தவர் அல்லது திறத்தவரின் ஆதனம் தொடர்பாக உள்ள ஏதேனும் பிரதான பகுதி ஒன்றுக்கு எவரேனும் நம்பிக்கையாளர், நிர்வாக அலுவலர், பெறுநர் அல்லது நிறுவனக் கலைப்பு அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு சம்மதம் வழங்குதல் அல்லது தடையின்றி உடன்படுவதை ஒரு திறத்தவர் வேண்டுகின்ற போது அல்லது (iii) ஒரு திறத்தவர் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றில் அல்லது ஏதேனும் முகவர் நிலையத்திற்கு முன்பு வங்குரோத்து தொடர்பாக, கம்பனியைக் கலைத்தல் அல்லது மற்றைய திறத்தவரின் வங்குரோத்து நிலையை அல்லது ஏதேனும் ஒப்புவமை நடவடிக்கைகள் தொடர்பாக நிறுவன விண்ணப்பம் ஓன்றைச் சமர்ப்பித்து அல்லது கோப்புச் செய்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நீடிக்கப்படாமலோ அல்லது நிராகரிக்கப்பட்டிருந்தால் எனப் பொருள்படும்;

**“உடன்படிக்கை”** என்பது, இந்த முதன்மை மீள் கொள்வனவு உடன்படிக்கையும், அதனுடன் இணைந்த, அதனுடைய ஒரு பகுதியாக அமையக்கூடிய, அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் எனப் பொருள்படும்;

**“திருத்தப்பட்ட மீள்கொள்வனவு விலை”** என்பது, பிரிவு 07 இல் தரப்பட்டுள்ள பொருளை உடையதாக அமையும்;

**“வர்த்தக தினம்”** என்பது, வணிகர் வியாபாரத்திற்காக, பொதுவாக திறந்து வைக்கப்படும் நாள் எனப் பொருள்படும்;

**“CDS கணக்கு”** என்பது, பொருத்தமான தகுதியுடைய பிணையங்கள் வைத்திருக்கப்படும் அல்லது பொருத்தமான வகையில் வைத்திருக்கப்பட வேண்டிய இடத்தில் வாடிக்கையாளர் அரசாங்க பிணையங்களுக்காக (“லங்கா செக்குவர்”) மத்திய சேமிப்பு முறைமையுடன் (CDS) வாடிக்கையாளருடைய கணக்கு;

**“உறுதிப்படுத்துதல்”** என்பது, இதனுடன் இணைக்கப்பட்ட இணைப்பு 01 இல் தோன்றக்கூடிய படிவத்தை வணிகர் உறுதிப்படுத்தி வழங்குதல் எனப் பொருள்படும்;

**“செலுத்தத் தவறும் விகிதம்”** என்பது, SLIBOR பிளஸ் வருடாந்தம் 2%;

**“தகுதியுடைய பிணையம்”** என்பது, இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கையின் மத்திய வங்கியினால் மற்றும் ஏதேனும் ஏனைய வகையிலான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பிணையம், உண்டியல், குறிப்பு அல்லது கடன் பத்திரம் எனப்பொருள்படும். இத்தகைய நோக்கங்களுக்காக வணிகர், காலத்திற்குக் காலம் வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்படும் ஒரு தகுதியுடைய பிணையத்தையும் இது உள்ளடக்கும்;

**“சமவலுவுள்ள பிணையங்கள்”** என்பது, 06 ஆவது வாசகத்தில் உள்ள நியதிகளுக்கு அமைவாக கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் பதிலீடு செய்யப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அதையொத்த பிணையங்கள், பெறுமதி மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களுடைய அதேதொகை என்பவற்றுடன் தொடர்புபடுகின்ற ஏதேனும் ஒரு சூழ்நிலை எனப் பொருள்படும்.

**“ஹெயார்கட்”** என்பது, ஏதேனும் தகுதியுடைய பிணையங்கள் தொடர்பாக, சந்தைப் பெறுமதிக்குரிய (திறத்தவர்களுக்கிடையில் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட அல்லது வணிகர் மற்றும் வாடிக்கையாளர்ளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல் ஒன்று நிகழ்ந்த சந்தர்ப்பத்தில், வணிகரினால் நல்லெண்ணத்தில் தீர்மானிக்கப்பட்ட ஒரு கழிவு ஹெயார்கட் எனப்படும்.

**“வருமானம்”** என்பது, கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் தொடர்பாக உள்ள ஏதேனும் கூப்பன்கள், வட்டி, பங்குலாபங்கள் மற்றும் வழங்குநரால் செலுத்தப்பட்ட ஏதேனும் ஏனைய கொடுப்பனவு (முதல்வர் தொடர்பாக செலுத்தப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு தவிர்ந்த) கள் என்பனவாகும்.

**“LKR”** என்பது இலங்கை ரூபாய்கள்

**“சந்தைப் பெறுமதி”** என்பது, ஏதேனும் பிணையங்கள் தொடர்பாக அத்கைய பிணையங்களுக்காக சந்தையில் இருக்கக்கூடிய பெறுமதி அல்லது அத்தகைய பெறுமதி ஒன்று இல்லாதவிடத்து, உறுதிப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய முறைமைக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்ட பெறுமதி எனப் பொருள்படும்.

**“செலுத்தத் தவறுகை தொடர்பான அறிவித்தல்”** செலுத்தத் தவறுகை ஒன்றுக்கான நிகழ்வு ஒன்று நடைபெற்றுள்ளது என்பதை செலுத்த தவறாத திறத்தவரினால் செலுத்தத் தவறிய திறத்தவருக்கு அறிவிக்கப்படும் ஒரு அறிவித்தல் எனப் பொருள்படும். அத்தகைய அறிவித்தல், பொருத்தமான விரைவுபடுத்தில் திகதி மற்றும் கொடுப்பனவு முடிவுறுத்தப்படும் திகதி என்பனவற்றைக் குறித்துரைக்கும்.

**“முடிவுறுத்தல் நிகழ்வு தொடர்பான அறிவித்தல்”** முடிவறுத்தல் ஒன்றுக்கான நிகழ்வு ஒன்று நடைபெற்றுள்ளது என்பதை செலுத்தத் தவறாத திறத்தவரினால், செலுத்தத் தவறிய திறத்தவருக்கு அறிவிக்கப்படும் ஒரு அறிவித்தல் எனப் பொருள்படும். அத்தகைய அறிவித்தல் பொருத்தமான விரைவுபடுத்தல் திகதி மற்றும் கொடுப்பனவு முடிவுறுத்தப்படும் திகதி என்பனவற்றைக் குறித்துரைக்கும்.

**“கொள்வனவுத் திகதி”** பொருத்தமான உறுதிப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய திகதி எனப் பொருள்படும்.

**“கொள்வனவு விலை”** பொருத்தமான உறுதிப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய விலை எனப் பொருள்படும்.

**“கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்”** பொருத்தமான உறுதிப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய பிணையங்கள் மற்றும் அவை இங்கு குறித்துரைக்கப்பட்ட 6வது வாசகத்திலுள்ள நியதிகளுக்கு அமைவாக இருக்கக்கூடிய ஏதேனும் பதிலீடு செய்யப்பட்ட தகுதியுடைய பிணையங்களையும் உள்ளடக்கும்.

**“மீள் கொள்வனவுத் திகதி”** பொருத்தமான உறுதிப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய திகதி எனப் பொருள்படும்.

**“மீள் கொள்வனவு விலை”** பொருத்தமான உறுதிப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய விலை எனப் பொருள்படும்.

**“மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்”** என்பது, வணிகர் ஒரு உடன்பட்டுக்கொண்ட விலையில் (“கொள்வனவு விலை”) (“கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்”) தகுதியுடைய பிணையங்களை வாடிக்கையாளருக்கு ஒரு உடன்பட்டுக்கொண்ட திகதியில் விற்பனை செய்ய உடன்படுகின்ற கொடுக்கல் வாங்கல் எனப்படும். அத்துடன், பொருத்தமான உறுதிப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளுக்கு அமைவாக வாடிக்கையாளர், அதேபோன்று கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை ஒரு உடன்பட்டுக்கொண்ட விலையில் (மீள் கொள்வனவு விலை) ஒரு உடன்பட்டுக்கொண்ட திகதியில் (மீள் கொள்வனவுத் திகதி) விற்பனை செய்வதற்கு உடன்படுதல்.

**“சுழற்சி மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்”** என்பது, வணிகர் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை, பொருத்தமான கொள்வனவு விலையில், பொருத்தமான கொள்வனவுத் திகதியன்று வாடிக்கையாளருக்கு விற்பனை செய்வதற்கு உடன்படுகின்ற ஒரு கொடுக்கல் வாங்கல் எனப்படும். அத்துடன், வணிகர் அதேபோன்று பொருத்தமான உறுதிப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளுக்கு அமைவாக கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை பொருத்தமான மீள் கொள்வனவு விலையில், பொருத்தமான மீள் கொள்வனவுத் திகதியன்று, வாடிக்கையாளருக்கு விற்பனை செய்ய உடன்படுதல்.

**“SLIBOR” என்பது**, இலங்கையின் வங்கிகளுக்கிடையான முனைவு செய்யப்பட்ட விகிதம் - பொருத்தமான / இயைபான நாளில் 11 am ற்கு (SLIBOR) பக்கத்தில் Recturs காட்சியகத்தில் / தோன்றக்கூடிய ஒரு மாத காலப்பகுதிக்கு பணச் சந்தை வங்கிகளுக்கிடையான அழைப்பினால் முனைவு செய்யப்பட்ட விகிதம்;

**“முடிவுறுத்தல் அறிவித்தல்”** என்பது, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வாசகம் 7(iii) க்கு அமைவாக வழங்கப்படும் அறிவித்தலாகும்.

**“முடிவுறுத்தல் கொடுப்பனவுத் திகதி”** என்பது, முடிவுறுத்தல் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு, பிரிவு 07 இன் கீழ் உள்ள பொருத்தமான தொகையை செலுத்தப்பட வேண்டிய திகதியாகும்.

**“கொடுக்கல் வாங்கல்”** என்பது, ஒரு மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல் அல்லது ஒரு சுழற்சி மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல் எனப் பொருள்படும்.

மேலதிகமாக வேறு ஏதேனும் வகையில் வேண்டப்படாதவிடத்து, இவ்வுடன்படிக்கையின்

(அ) பகுதித் தலைப்புக்கள் இலகுவான உசாத்துணைக்காக மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளது. இது, இவ்வுடன்படிக்கையின் உருவாக்கத்தை எவ்வகையிலும் பாதிக்காது.

(ஆ) பகுதிகள் தொடர்பாக உள்ள உசாத்துணைகள் இவ்வுடன்படிக்கையின் பகுதிகள் தொடர்பானது என்ற வகையில் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

(இ) ஒருமையில் பயன்படுத்தப்படும் சொற்கள் பன்மையாகவும், அதேபோன்று பன்மையில் பயன்படுத்தப்படுகின்ற சொற்ககள் ஒருமையாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். மேலும், ஆண் பாலைக் குறிக்கும் சொற்கள், பெண்பாலைக் கொண்டதாகவும், பெண்பாலைக் கொண்ட சொற்கள் ஆண்பாலைக் கொண்டதாகவும் பயன்படுத்தப்படும்; அத்துடன்,

(ஈ) ஏதேனும் ஒரு சட்டம் அல்லது துணைநிலைச் சட்டம் தொடர்பாகக் குறிப்பீடு செய்யப்படுகின்ற விடத்து, அத்தகைய சட்டம் அல்லது துணைநிலைச் சட்டவாக்கம், காலத்திற்குக் காலம் திருத்தப்படுகிற மீளதாக்கப்படுகின்ற அல்லது பதிலீடு செய்யப்படுகின்ற சட்டங்களையும் உள்ளடக்கும்.

**2. மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்**

(i) திறத்தவர்கள் கொடுக்கல் வாங்கல் ஒன்றில் ஈடுபடுகின்ற போது, **வணிகர்** ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பான நியதிகளைக் குறிப்பிட்டு, ஒரு உறுதிப்படுத்துதலை வழங்க வேண்டும்.

(ii) திறத்தவர்களுக்கு இடையில் கைச்சாத்திடப்படுகின்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் (வெளிப்படையாக வேறு வகையில் ஏற்பாடு செய்யப்படாத வரையில்) இந்த முதன்மை மீள் கொள்வனவு உடன்படிக்கைக்கு அமைவாகவும், அதன் ஒரு பகுதியாகவும், அதன் மூலமும் ஆளப்படும். இவ்வகையில் அத்தகைய ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பான அனைத்து உறுதிப்படுத்தல்களும், இந்த முதன்மை மீள் கொள்வனவு உடன்படிக்கையுடன் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு தனி உடன்படிக்கையாக உருவாக்கப்படும்.

(iii)பிரிவு 7 க்கு அமைவாக

(a) ஒவ்வொரு மீள் கொள்வனவு உடன்படிக்கை தொடர்பாக,

(A) கொள்வனவுத் திகதியன்று, **வணிகர்** கொள்வனவு விலையைப் பெற்றுக் கொண்டதற்கு அமைவாக, (வாடிக்கையாளர் ஒருவருக்கு வணிகருடன் ஒரு கணக்கு இருக்கின்ற போது வணிகர் வாடிக்கையாளருடைய நிதிக் கணக்கில் இருந்து வரவு வைக்கலாம்.) பொருத்தமான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் CDS கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டும் அல்லது, பொருத்தமான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் CDS கணக்கிற்கு கைமாற்றம் செய்யப்பட வேண்டும்.

(B) கொள்வனவுத் திகதியன்று பொருத்தமான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களுடன் வணிகர் வாடிக்கையாளரின் CDS கணக்கில் வரவு வைக்க வேண்டும் அல்லது பொருத்தமான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் தொடர்பாக வாடிக்கையாளரின் CDS கணக்கிலிருந்து ஒரு கைமாற்றத்தைப் பெற வேண்டும் அத்துடன் வணிகருடன் கொள்வனவு விலையை வாடிக்கையாளரின் நிதிக் கணக்கில் பற்று வைக்க வேண்டும் அல்லது வாடிக்கையாளர் இணங்கிக் கொண்டதற்கு அமைவாக வாடிக்கையாளரால் இத்தகைய நோக்கங்களுக்காக வேறு ஏதேனும் வகையில் பணத்தைச் செலுத்த குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அத்தகைய ஏனைய கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

(C) வணிகரினால் வாடிக்கையாளருக்கு மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலும், கொள்வனவு விலை ஒன்றுக்காக கொள்வனவுத் திகதியன்று உள்ள கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களுக்கான விற்பனையை உள்ளடக்கும். அத்துடன், வாடிக்கையாளரிடம் இருந்து வணிகரினால் மேற்கொள்ளப்படும் கொள்வனவு மீள் கொள்வனவு விலை ஒன்றுக்காக மீள் கொள்வனவுத் திகதியன்று மேற்கொள்ளப்படும் கொள்வனவுப் பிணையங்களை உள்ளடக்கும். அத்துடன், (சந்தேகத்தை நீக்கும் பொருட்டு) அத்தகைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் மீதான முழுமையான சட்ட மற்றும் அனுகூலங்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியன்று வாடிக்கையாளர் வசமும் மீள் கொள்வனவு செய்த திகதியன்று வணிகர் வசமும் சாட்டுதல் செய்யப்படும்.

(b) ஒவ்வொரு சுழற்சி மீள் கொள்வனவு தொடர்பாக,

(A) கொள்வனவுத் திகதியன்று, பொருத்தமான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களுடன் வணிகர் வாடிக்கையாளருடைய CDS கணக்கிற்கு வரவு வைக்க வேண்டும் அல்லது பொருத்தமான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் தொடர்பாக வாடிக்கையாளருடைய CDS கணக்கிலிருந்து ஒரு கைமாற்றத்தைப் பெற வேண்டும் அத்துடன் வணிகருடன் கொள்வனவு விலையை வாடிக்கையாளருடைய நிதிக் கணக்கில் பற்று வைக்க வேண்டும் அல்லது வாடிக்கையாளர் இணங்கிக்கொண்டதற்கு அமைவாக வாடிக்கையாளரால் இத்தகைய

நோக்கங்களுக்காக வேறு ஏதேனும் வகையில் பணத்தைச் செலுத்த குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அத்தகைய ஏனைய கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

(B) மீள் கொள்வனவுத் திகதியன்று, **வணிகர்** கொள்வனவு விலையைப் பெற்றுக் கொண்டதற்கு அமைவாக, (வாடிக்கையாளர் ஒருவருக்கு வணிகருடன் ஒரு கணக்கு இருக்கின்ற போது வணிகர் வாடிக்கையாளருடைய நிதிக் கணக்கில் இருந்து வரவு வைக்கலாம்.) பொருத்தமான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் CDS கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டும் அல்லது, பொருத்தமான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் CDS கணக்கிற்கு கைமாற்றம் செய்யப்பட வேண்டும்.

(C) வணிகரினால் வாடிக்கையாளருக்கு மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சுழற்சி மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலும், கொள்வனவு விலை ஒன்றுக்காக கொள்வனவுத் திகதியன்று உள்ள கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களுக்கான விற்பனையை உள்ளடக்கும். அத்துடன், வாடிக்கையாளரிடம் இருந்து வணிகரினால் மேற்கொள்ளப்படும் கொள்வனவுகள் மீள் கொள்வனவு விலை ஒன்றுக்காக மீள் கொள்வனவுத் திகதியன்று மேற்கொள்ளப்படும் கொள்வனவுப் பிணையங்களை உள்ளடக்கும். அத்துடன், (சந்தேகத்தை நீக்கும் பொருட்டு) அத்தகைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் மீதான முழுமையான சட்ட மற்றும் அனுகூலங்கள் மீள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியன்று வாடிக்கையாளர் வசமும் சாட்டுதல் செய்யலாம்.

(iv) உறுதிப்படுத்துதல் வேறேதேனும் வகையில் குறித்துரைக்கப்பட்டால் தவிர, ஒரு மீள் கொள்வனவு உடன்படிக்கையில் வாடிக்கையாளரும் அல்லது ஒரு சுழற்சி மீள் கொள்வனவு உடன்படிக்கையின் வணிகரும் கொள்வனவுத் திகதியிலிருந்து மீள் கொள்வனவுத் திகதிக்கு கொள்வனவுப் பிணையங்களை நீக்கவோ அல்லது நிறைவாக்கவோ அழைப்பதற்கு உரித்துடையவராவர்.

**03. வருமானம்**

கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் தொடர்பாக வழங்குநரால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் வருமானம் தொடர்பான கொடுப்பனவு (வருமானக் கொடுப்பனவு) உள்ளவிடத்து

(i) அவை கொள்வனவுத் திகதியின் பின்னரான எந்த நேரத்திலும் அத்துடன், மீள் கொள்வனவுத் திகதிக்கு முன்பதான எந்தவொரு திகதியிலும் ஒரு மீள் கொள்வனவு உடன்படிக்கையில் பிரதான விடயதானமாக அமைவதோடு, அத்தகைய தொகை வணிகரின் நன்மைக்காகப் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அது, (சந்தேகத்தை நீக்கும் பொருட்டு) வணிகரினால் முழுமையாகப் பெற்றுக்கொள்ள உரித்துடைய தொகையாகும். அத்துடன், அத்தகைய வருமானக் கொடுப்பனவு வாடிக்கையாளருக்குச் செலுத்தப்பட்டிருந்தால், வாடிக்கையாளர் அவரால் பெற்றுக் கொண்ட தொகைக்குச் சமமான ஒரு தொகையை வியாபார நாள் அன்று வணிகருக்குச் செலுத்த வேண்டும். அத்துடன்,

(ii) ஒரு சுழற்சி மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் அவை கொள்வனவுத் திகதியின் பின்னரான எந்த நேரத்திலும் அத்துடன், மீள் கொள்வனவுத் திகதிக்கு முன்பதான எந்தவொரு திகதியிலும் அத்தகைய தொகை வாடிக்கையாளரின் நன்மைக்காகப் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அது, (சந்தேகத்தை நீக்கும் பொருட்டு) வாடிக்கையாளரால் முழுமையாகப் பெற்றுக்கொள்ள உரித்துடைய தொகையாகும். அத்துடன், அத்தகைய வருமானக் கொடுப்பனவு வணிகருக்குச் செலுத்தப்பட்டிருந்தால், வணிகர் அவரால் பெற்றுக்கொண்ட தொகைக்குச் சமமான ஒரு தொகையை வியாபார நாளன்று வாடிக்கையாளருக்குச் செலுத்த வேண்டும்.

**04. பிரதிநிதித்துவங்கள்**

(I) ஒரு வாடிக்கையாளர் பின்வரும் வகையில் வணிகரிடம் பிரதிநிதித்துவப்படுத்தலாம் (இத்தகைய பிரதிநிதித்துவம் ஒவ்வொரு நாளும் வாடிக்கையாளரால் ஈடுபடுகின்ற கொடுக்கல் வாங்கல்களில் மீள் செய்யப்படலாம்.

(i) இந்த ஒப்பந்தத்தின் கீழ் மற்றும் இந்த உடன்படிக்கையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கு அமைவாகவும், பொருத்தமான உறுதிப்படுத்தலுக்கு அமைவாகவும், வாடிக்கையாளருக்கு முழுமையான தகைமை அதிகாரம் மற்றும் தத்துவம் உள்ளதோடு, அவர், அவற்றின் கீழ் எழக்கூடிய கடப்பாடுகள் தொடர்பாக அதிகாரங்களை வழங்க, சம்மதம் வழங்க மற்றும் அவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து அதிகாரங்களையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

(ii) வாடிக்கையாளர் இந்த உடன்படிக்கையில் ஈடுபடுவதுடன், அத்தகைய கொடுக்கல் வாங்கல் இங்கு முதன்மையாக அமையும்.

(iii) இவ்வுடன்படிக்கையின் கீழ் உள்ள ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களின் கீழ் வாடிக்கையாளரால் செலுத்தப்பட்ட அனைத்து தொகைகளுக்கும் வாடிக்கையாளர் ஏக அனுகூலம் பெறும் உரிமையாளராக வருவார்.

(iv) இந்தக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வாடிக்கையாளர், வாடிக்கையாளருடைய நிதிச் சூழ்நிலைகளின் பின்னணியில் இவ்வுடன்படிக்கையின் கீழ் இருந்து எழக்கூடிய வரி மற்றும் கணக்கியல் விடயங்களில் இருக்கக்கூடிய நிதி அனுகூலங்கள் மற்றும் இடர்கள் என்பவற்றை மதிப்பீடு செய்து, அதனைப் பற்றிய முழுமையான அறிவினையும், போதுமானளவு அனுபவத்தையும் (வாடிக்கையாளரின் சொந்த அனுமானம் மற்றும் மதிப்பீடு அல்லது வாடிக்கையாளர் அவசியம் எனக் கருதப்பட்டு, சுயாதீனமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் ஆலோசனைகள் என்பனவற்றின் மீது) பெற்றுக்கொள்கின்றார்.

(v) வாடிக்கையாளர் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகவும் மற்றும் இந்த உடன்படிக்கை தொடர்பாகவும் வணிகரின் ஆலோசனை அல்லது கருத்தினை நம்பியிராது தனது சொந்த மதிப்பீட்டின் அடிப்படையில் (வாடிக்கையாளர் அவசியமானது எனக் கருதும் தொழில்சார் அறிவுரையாளர்களில் இருந்து பெற்றுக் கொண்ட அத்தகைய ஆலோசனைகளுக்கு அமைவாக) ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஈடுபடுவதற்கு வாடிக்கையாளர் தீர்மானிக்கின்றார். அத்துடன்,

(vi) வாடிக்கையாளர் இதன்பின்பு ஏற்படக்கூடிய ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கல்கள் தொடர்பாக முழுமையாகத் திருப்தியடைந்து, தொடர்ச்சியாக அதனை மதிப்பீடு செய்யவும், வரிவிதிப்புக்கள் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் தான் பொறுப்புக் கூற வேண்டிய வகையில் ஒரு திறத்தவராக வருகின்றார்.

(2) ஒரு வணிகர் பின்வரும் வகையில் வாடிக்கையாளருக்கு பிரதிநிதித்துவப்படுத்தலாம் (இத்தகைய பிரதிநிதித்துவம் ஒவ்வொரு நாளும் வணிகரால் ஈடுபடுகின்ற கொடுக்கல் வாங்கல்களினால் மீட்கப்படும்).

(i) இந்த ஒப்பந்தத்தின் கீழ் மற்றும் இந்த உடன்படிக்கையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கு அமைவாகவும், பொருத்தமான உறுதிப்படுத்தலுக்கு அமைவாகவும், வணிகருக்கு முழுமையான தகைமை அதிகாரம் மற்றும் தத்துவம் உள்ளதோடு, அவர், அவற்றின் கீழ் எழக்கூடிய கடப்பாடுகள் தொடர்பாக அதிகாரங்களை வழங்க, சம்மதம் வழங்க மற்றும் அவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து அதிகாரங்களையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

(ii) கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வணிகர், வணிகரினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை தொடர்பாக, நடைமுறையிலுள்ள ஏதேனும் செயலறிவுள்ள விதிகளை அல்லது ஒழுங்கு விதிகளை மீறுதல் கூடாது.

## 5. வரிகள்

வேறு வகையில் உடன்பட்டுக்கொண்டால் தவிர, இதன் கீழ் ஏற்படுத்திக்கொள்கின்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அனைத்துக் கொடுப்பனவுகளும் அத்துடன், ஏதேனும் வரி விதிக்கக்கூடிய அதிகாரத்தைக் கொண்ட சபையினால் ஏதேனும் சட்டத்தினால் அல்லது வரிவிதிப்பனவு மேற்கொள்ளப்படும் நிறுவனத்தினால் தேவைப்படுத்தப்பட்டிருந்தால் தவிர, ஏதேனும் வரிகளை அறவிடவோ, சேகரிக்கவோ அல்லது வரியைப் பிடித்து வைத்துக் கொள்ளவோ அல்லது வரி மதிப்பீட்டை மேற்கொள்ளவோ போன்ற தன்மையுடைய விடயங்களை பிணிக்காது கட்டணம் இன்றி, மிகத் தெளிவாகவும் செலுத்தப்பட வேண்டும். இத்தகைய சூழ்நிலைகளில் செலுத்துகின்ற திறத்தவர், அத்தகைய ஏதேனும் மொத்தக் கொடுப்பனவுக்கு பொறுப்புடையவர் அல்ல. அத்துடன், அத்தகைய வரி விதிப்பு அல்லது வரியைப் பிடித்து வைத்தல் என்பவற்றுக்கு பின்பு வரக்கூடிய நிகர தொகை பெற்றுக்கொள்ளும் திறத்தவருக்குச் செலுத்தப்பட வேண்டும்.

## 6. பதிலீடு

(i) ஏதேனும் மீள் கொள்வனவு உடன்படிக்கை தொடர்பாக கொள்வனவுத் திகதிக்கும் மீள் கொள்வனவுத் திகதிக்கும் இடைப்பட்ட ஏதேனும் ஒரு நேரத்தில் வாடிக்கையாளர் ஏதேனும் பொருத்தமான உறுதிப்படுத்தலுக்கு அமைவாக ஏதேனும் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களுக்காக, ஏனைய தகுதிவாய்ந்த பிணையங்களைப் பதிலீடு செய்யலாம். எவ்வாறாயினும், அத்தகைய பதிலீடு செய்யப்பட்ட தகுதியுடைய பிணையங்கள், குறைந் தபட்சம் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள், பதிலீடு செய்யப்பட்ட திகதியன்று, முதல் முறையாக பதிலீடு செய்யப்பட்ட போது இருந்த சந்தை விலைக்குச் சமனான ஒரு சந்தைப் பெறுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய பதிலீடு, அத்தகைய ஏனைய தகுதியுடைய பிணையங்களை வாடிக்கையாளருக்குக் கைமாற்றுவதன் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் தொடர்பாக பொருத்தமான அதேநிகரான தொகையைக் கொண்ட கைமாற்றத்தை வாடிக்கையாளருக்கு மேற்கொள்வதன் மூலம் பதிலீடு செய்யப்பட வேண்டும். பதிலீட்டின் பின்பு பதிலீடு செய்யப்பட்ட பிணையங்கள் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களாக அமைவதோடு, ஆரம்பத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களுக்கான பதிலீட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் என அழைக்கப்படுவதிலிருந்து விடுபடும். இதற்கு அமைவாக, வணிகர் வாடிக்கையாளர் CDS கணக்கிற்கு வரவு மற்றும் செலவு வைக்க உரித்துடையவர் அல்லது வாடிக்கையாளரின் CDS கணக்கிலிருந்து ஒரு கைமாற்றத்தைப் பெற்றுக்கொள்ள அல்லது அக்கணக்கிற்கு ஒரு கைமாற்றததை மேற்கொள்ள வாடிக்கையாளர் உரித்துடையவர் ஆவார்.

(ii) ஒரு சுழற்சி மீள் கொள்வனவு உடன்படிக்கை தொடர்பாக பொருத்தமான உறுதிப்படுத்தல் அத்தகைய பதிலீடு ஒன்றினை வழங்கியிருந்தால் மாத்திரமே பகுதி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பதிலீட்டு ஏற்பாடுகள் ஏற்புடையதாக வரும்.

## 07. செலுத்தத் தவறுகின்ற நிகழ்வு / முடிவுறுத்தும் நிகழ்வு

(i) கீழே தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் இவ்வுடன்படிக்கையின் கீழ் செலுத்தத் தவறிய சந்தர்ப்பங்களாகக் கருதப்படும்.

(அ) இதன் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கொடுப்பனவை, ஏதேனும் திறத்தவர்கள் செலுத்தத் தவறுகின்ற போது அல்லது கடப்பாட்டை நிறைவேற்றத் தவறுகின்ற போது,

(ஆ) இதன் கீழ் ஏதேனும் விடயம் தொடர்பாக ஒரு திறத்தவரால் செய்யப்பட்ட ஏதேனும் பிரதிநிதித்துவம் பொய்யானதாக அல்லது பிழையான வழியில் இட்டுச் செல்வதாக அமைகின்ற போது,

(இ) எவரேனும் ஒரு திறத்தவர் வங்குரோத்து நிலையை அடைகின்ற ஒரு சந்தர்ப்பம்

(ஈ) வாடிக்கையாளர் தனி ஒரு நபராக இருந்து அவர் மரணமடைகின்ற விடத்து அல்லது சித்த சுவாதீனமுற்றவராக வருகின்றவிடத்து அல்லது வேறு ஏதேனும் வகையில் இயலாதவராக வருகின்றவிடத்து, இறப்பு நிகழ்கின்றவிடத்து வாடிக்கையாளரால் வணிகருக்குச் செலுத்தப்பட வேண்டிய நிதி ரீதியான கடப்பாடுகளை இறப்பு நிகழ்ந்து 30 நாட்களுக்குள் திருப்திப்படுத்தத் தவறுகின்ற சந்தர்ப்பம்.

(ii) செலுத்தத் தவறுகின்ற திறத்தவர், செலுத்தத் தவறாத திறத்தவருக்கு தான் செலுத்தத் தவறுகின்ற ஒரு திறத்தவராக வரக்கூடிய நிகழ்வுகளை அறிவிப்பதற்கு கடப்பாடு உடையவராவர். இவ்வாறு தெரிவிப்பதன் மூலம் செலுத்தத் தவறுகின்ற திறத்தவர் பற்றி தெிந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் போது.

(iii) ஏதேனும் செலுத்தத் தவறுவதற்கான சந்தர்ப்பம் ஒன்று நிகழ்கின்றவிடத்து, செலுத்தத் தவறாத திறத்தவர், 03 நாட்களுக்குக் குறையாத காலப்பகுதியை உள்ளடக்கிய முடிவுறுத்தும் அறிவுறுத்தல் ஒன்றை வழங்கலாம்.

(iv) செலுத்தத் தவறாத திறத்தவர், முடிவுறுத்தும் அறிவித்தலை வழங்கியுள்ளவிடத்து இங்கு குறிப்பிடப்படும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பான மீள் கொள்வனவுத் திகதி விரைவுபடுத்தும் திகதியாக மாற்றப்பட வேண்டும். (இங்கு குறிப்பிடப்டுகின்ற நியதிகளுக்கு அமைவாக, அத்தகைய திகதி முடிவுறுத்தும் அறிவித்தல் வழங்கப்படுகின்ற திகதிக்கு முன்பதாக அமையக்கூடாது). ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பாக உள்ள பொருத்தமான மீள் கொள்வனவுத் திகதியை விரைவுபடுத்துதலை கருத்தில் எடுத்து வணிகர் நல்லெண்ணத்துடன் ஒரு விலையைத் தீர்மானித்து ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பான மீள் கொள்வனவு விலையைத் திருத்தியமைக்கலாம். (அத்தகைய திருத்தப்பட்ட மீள் கொள்வனவு விலை “திருத்தப்பட்ட மீள் கொள்வனவு விலை எனப்படும்)

(v) விரைவுபடுத்தும் திகதி ஒன்று ஏற்படுகின்றவிடத்து (A) வணிகர் பின்வருவனவற்றை தீர்மானித்தல் வேண்டும். (a) இதனகத்துள்ள ஒவ்வொரு கொள்வனவு செய்யப்பட்ட பிணையத்தினுடைய சந்தைப்பெறுமதி (b) இதனகத்துப் பின்னர் திருத்தப்பட்ட மீள் கொள்வனவு விலைகள் மற்றும் (B) கொடுக்கல் வாங்கல்களின் கீழ் இயல்பாகவே பதிலீடு செய்யப்படும் திறத்தவர்களுடைய கடப்பாடுகள்.

(1) வாடிக்கையாளரின் கடப்பாட்டின் மீது (பிரிவு 7 (vi) க்கு அமைவாக) கட்டணம் முடிவுறுத்தும் திகதி ஒன்றின் மீது வணிகருக்கு அத்தகைய நிதிக் கொடுப்பனவுக்கு சமமான ஒரு தொகையைச் செலுத்தும் போது (a) அனைத்து மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் கீழ் உள்ள சந்தைப் பெறுமதிகளின் சராசரி மற்றும் (b) அனைத்து சுழற்சி மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் கீழ் உள்ள திருத்தப்பட்ட மீள் கொள்வனவுகளின் சராசரி (அத்தகைய தொகை “வணிகருடைய தொகைகள்” எனப்படும்) என்பன (c) அனைத்து சுழற்சி மீள் கொள்வனவு உடன்படிக்கைகளின் சந்தைப் பெறுமதி கொண்ட சராசரியைவிட அதிகரிக்கின்ற போது (d) ஏதேனும் மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் கீழ் உள்ள திருத்தப்பட்ட மீள் கொள்வனவு விலைகளின் சராசரி (அத்தகைய தொகை “வாடிக்கையாளர் தொகைகள்” எனப்படும்), அத்துடன்;

(2) வாடிக்கையாளர் தொகைகள் (பிரிவு 7(v)(B)(1) இல் வரைவிலக்கணப்படுத்தும் வகையில்) வணிகரின் தொகைகளை (பிரிவு 7(v)(B)(1) இல் வரைவிலக்கணப்படுத்தும் வகையில்) விட வணிகர் சார்பாக கட்டணம் முடிவுறுத்தும் திகதி ஒன்றின் மீது வாடிக்கையாளருக்கு அத்தகைய நிதிக் கொடுப்பனவுக்கு (பிரிவு 7 (vi) க்கு அமைவாக) சமமான ஒரு தொகையைச் செலுத்தும் போது

(vi) இவ்வுடன்படிக்கையின் கீழ் தோன்றக்கூடிய ஏதேனும் ஏனைய தொகைகள் அல்லது வேறு வகையில் செலுத்த வேண்டிய தொகைகள் உள்ள போது, ஒவ்வொரு விடயத்தையும், பிரத்தியேகமாகக் கொண்டு, கணக்குகளை ஒன்றிணைப்பதன் மூலம் இருக்கக்கூடிய ஏதேனும்

ஏனைய உரிமைகளை மட்டப்படுத்தாது, வணிகருக்கு (a) ஏதேனும் ஏனைய தொகைகள் தொடர்பாக வாடிக்கையாளரால் பிரிவு 7(v)(B)(1) பிரிவில் உள் தொகை (B)பிரிவு 7(v) வாடிக்கையாளரால் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் தொகையை திர்ப்பளிப்புச் செய்யலாம்.

## 08. அறிவித்தல்கள்

அறிவித்தல்கள் அனைத்தும் வாடிக்கையாளரால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கோ அல்லது வாடிக்கையாளரால் எழுத்து மூலமாக வணிகருக்கு அறிவிக்கப்பட்டுள்ள அத்தகைய ஏனைய முகவரிக்கோ அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன், அத்தகைய அறிவித்தல்கள் வாடிக்கையாளரால் பின்வரும் சந்தர்ப்பங்களில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

(1) வணிகருடைய வியாபார நாள் ஒன்றில் அதே நாளன்று வியாபார நேரங்களின் போது (வியாபார நேரம்) (அல்லது அனுப்பி வைக்கப்பட்ட தினத்தில் வியாபார நாள் ஒன்றாக அல்லாதவிடத்து அல்லது அனுப்பி வைக்கப்பட்ட நேரம் வியாாபர நேரத்திற்குப் புறம்பாக உள்ளவிடத்து மறு நாள் வியாபார நாள் அன்று வியாபார நேரம் ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்திலிருந்து, வியாபார நேரத்தின் போது தனிப்பட்ட ரீதியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(2) தொலைநகல் மூலமாக அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளவிடத்து, வியாபார நாளன்று தொலைநகல் அனுப்பி வைக்கப்பட்டமைக்கான சான்றுப்பத்திரம் (அல்லது தொலைநகல் அனுப்பப்பட்ட திகதி வியாபார நாள் ஒன்றாக அல்லாதவிடத்து அல்லது அனுப்பி வைக்கப்பட்ட நேரம் வியாபார நேரத்திற்குப் புறம்பாக உள்ள விடத்து மறு நாள் வியாபார நாள் அன்று வியாபார நேரம் ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்திலிருந்து, வியாபார நேரத்தின் போது தனிப்பட்ட ரீதியில் அனுப்பி வைத்தல்)

(3) தபால் மூலமாக அனுப்பியுள்ளவிடத்து தபாலில் சேர்த்த திகதியில் இருந்து இரண்டு வியாபார நாட்களின் பின்னர்

## 09. காலம் தாழ்த்திச் செலுத்தப்படும் கட்டணங்களுக்கான வட்டி

ஏதேனும் கொடுக்கல் வாங்கல் ஒன்றின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தை ஒரு திறத்தவர் செலுத்தத் தவறுகின்ற பட்சத்தில், அத்தகைய திறத்தவர் செலுத்தத் தவறிய விகிதத்தின் மீது வட்டி ஒன்றைச் செலுத்த வேண்டும். அத்தகைய பணம் செலுத்தப்பட வேண்டிய திகதியை உள்ளடக்கிய, ஆனால், பொருத்தமான கொடுப்பனவு உண்மையாக ஏனைய திறத்தவரினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அத்தகைய திகதியைத் தவிர்த்து உள்ள காலப்பகுதிக்குச் செலுத்தப்பட வேண்டும். அத்தகைய வட்டி, நாளாந்தக் கொடுப்பனவு மற்றும் சரியாக பிந்திச் செலுத்தப்பட்ட நாட்களின் தொகை என்பவற்றைக் கருத்திற் கொண்டு கணக்கிடப்படும்.

## 10. கைமாற்றப்பட முடியாத சந்தர்ப்பங்கள்

(i) இந்த உடன்படிக்கையின் கீழ் இருந்து எழுகின்ற அதன் உரிமைகளையும், கடப்பாடுகளையும், வேறு எவரேனும் ஒருவருக்கு, கைமாற்றவோ அல்லது சாட்டுதல் செய்யவோ முடியாது. அதேபோன்று ஏனைய திறத்தவர்களுடைய எழுத்து மூலமான சம்மதமின்றி இவ்வொப்பந்தம் தொடர்பாக மூன்றாம் திறத்தவருக்கு உரிமை உரிமைகளை உருவாக்க முடியாது.

(ii) கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் பொருத்தமான உறுதிப்படுத்தலில் குறித்துரைக்கப் பட்டிருந்தாலொழிய கொள்வனவுத் திகதி மற்றும் மீள் கொள்வனவுத் திகதி ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வியாபாரத்திற்காகப் பயன்படுத்த முடியாது.

**11. வணிகரின் கடப்பாடுகள் / வலுக்கட்டாய முறை**

(i) வணிகரின் கடப்பாடுகள் அவரால் மாத்திரமே நிறைவேற்றப்பட முடியும். அத்துடன், அத்தகைய நிறைவேற்றம் இலங்கையில் இருக்கக்கூடிய அனைத்து பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டதாகும்.

(ii) வலுக்கட்டாய நிலை அல்லது அரசு செயற்பாடு, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கடப்பாடுகளை வணிகர் நிறைவேற்ற இயலாதவிடத்து, அத்தகைய கடப்பாடுகள் வணிகரினால் அத்தகைய இயலாமை இருக்கக்கூடிய காலப்பகுதிக்கு இடை நிறுத்தப்பட வேண்டும். அத்துடன், இடைநிறுத்தக் காலப்பகுதியில் உள்ள இடை நிறுத்தப்பட்ட கடப்பாடுகள் தொடர்பாக வட்டியோ அல்லது வேறு கட்டணங்களோ விதிக்கப்பட முடியாது. (இடைநிறுத்தல் ஏற்பட்டதன் காரணமாக இருக்கக்கூடிய ஏனைய அத்தகைய கடப்பாடுகள் தொடர்பான செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் வட்டி அல்லது ஏனைய கொடுப்பனவு) எவ்வாறாயினும், அத்தகைய சூழ்நிலைகளில் வணிகர் பொருத்தமான கடப்பாடு ஏதேனும் கட்டணம் செலுத்தத் தவறுதல் அல்லது முடிவுறுத்தும் நிகழ்வு ஊடாக நிறைவேற்றப்பட வேண்டியது எனப் பிரகடனப்படுத்தலாம். இதன்மூலம் மறுதிறத்தவர், வணிகர் அத்தகைய கடப்பாட்டின் பெறுமதியைத் தீதறுப்புச் செய்வதற்கு உள்ளடக்கக்கூடியதாக இருக்கும்.

**12. ஆளப்படும் சட்டம் / நியாயாதிக்க சமர்ப்பிப்பு**

இந்த உடன்படிக்கை மற்றும் இதன் கீழ் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும், இலங்கையில் உள்ள சட்டங்களினால் ஆளப்படும். அத்துடன், திறத்தவர்கள் தமது விடயங்களை இலங்கையில் உள்ள நீதிமன்றங்களின் பிரத்தியேக நியாயாதிக்கத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

கீழே உள்ள சாட்சியங்களின் முன்னிலையில் திறத்தவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் இந்த ஆவணத்தை நிறைவேற்றி உள்ளனர். அத்துடன், இந்த ஆவணத்தின் முதலாம் பக்கத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதியில் இருந்து இது வலுவுக்கு வரும்.

| | |
|---|---|
| இவரால்…………………………………….. | இவரால்…………………………………….. |
| பெயர்: | பெயர்: |
| அந்தஸ்து | அந்தஸ்து |
| திகதி | திகதி |

(வாடிக்கையாளர் தனி நபராக உள்ளவிடத்து)

| | |
|---|---|
| கையொப்பம்/கள் ……………..……………… | ………………………………………………. |
| பெயர்: …………………………………… | பெயர்: …………………………………… |
| சாட்சி:……………………………………... | (பெயர்): …………………………………… |
| சாட்சி:……………………………………... | (பெயர்): …………………………………… |

திகதி:

(வாடிக்கையாளர் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினராக உள்ளவிடத்து )

…………………….. கம்பனியின் பொது இலச்சினை இத்தால் கொழும்பில் இடப்பட்டது, அத்துடன் இயக்குநர்கள் ………………………… இயக்குநர் மற்றும் ……………………………….. இயக்குநர் முன்னிலையில் கையொப்பமிட்டு இத்தால் உறுதிப்படுத்துகின்றனர்.

சாட்சிகள்

1.

2.

அல்லது

அனுமதியளிக்கப்பட்ட ………………………………. கையொப்பமிடப்பட்டது. கொழும்பில் கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட கைச்சாத்திடுநர் கையொப்பம்

சாட்சிகள்

1.

2.

இணைப்பு 1

வணிகருக்குரிய
முகவரியிடப்பட்ட அஞ்சல்தாள் (Letterhead of Dealer)

கடன் கொடுநர்: (வாடிக்கையாளரின் பெயர்)
கடன் பெறுநர்: (வணிகரின் பெயர்)
திகதி:
விடயம்: (கொடுக்கல் வாங்கல்)

அன்புடையீர்,

இந்த கடிதத்தின் நோக்கம் (எமக்கிடையிலான பிரதான மீள் கொள்வனவு உடன்படிக்கையின் ("உடன்படிக்கை") நோக்கத்திற்கான ஒரு "உறுதிப்படுத்துதல்"களை உள்ளடக்கும்.) கீழே குறித்துரைக்கப்பட்டுள்ள ஒப்பந்தத் திகதியில், எமக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான நியதிகளையும் நிபந்தனைகளையும் குறித்துரைப்பதாகும்.

இந்த உறுதிப்படுத்தல், இந்த உடன்படிக்கைக்கு அமைவாகவும், அதன் ஒரு பகுதியாகவும், அதிலுள்ள விடயங்களைக் குறை நிரப்புவதாகவும் அமைகின்றது; கீழே வெளிப்படையாக ஏதேனும் திருத்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் தவிர ஏனைய வேளைகளில் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து ஏற்பாடுகளும், இந்த உறுதிப்படுத்தலை ஆளும். உடன்படிகையில் பொருள் வழங்கப்பட்ட மற்றும் உறுதிப்படுத்தலில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களும், சொற்றொடர்களும் உடன்படிக்கையில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டதாகவே அமையும்.

இந்த உறுதிப்படுத்தல் மூலம் சான்றுறுதி செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல், லங்கா செக்குயரின் (Lanka Secure) Central Depository System (CDS) இல் பதிவு செய்யப்படும்.

1. ஒப்பந்தத் திகதி :
2. கொடுக்கல் வாங்கல்களின் இயல்பு (மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்) (சுழற்சி மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்):
3. கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்:
   *(விபரங்கள் + ISIN மற்றும் இலக்கள்)*
4. கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களுக்கான சந்தைப் பெறுமதி:
5. கொள்வனவுத் திகதி/பெறுமதித் திகதி:
6. கொள்வனவு விலை/வட்டி விகிதம்:
7. மீள் கொள்வனவுத் திகதியும் முதிர்வுத் திகதியும்:
8. மீள்கொள்வனவு விலை/வட்டி விகிதம்:
9. பிணையங்கள் பதிலீடு அனுமதிக்கப்பட்டுள்ளது (ஆம்/இல்லை):
10. பிணையங்களுக்கான நிறைவாக்குதல் அனுமதிக்கப்பட்டது (ஆம்/இல்லை):
11. பிணையங்களை நீக்குதல் அனுமதிக்கப்பட்டது (ஆம்/இல்லை):
12. பிணையங்களின் வணிகம் அனுமதிக்கப்பட்டது (ஆம்/இல்லை): இல்லை
13. மேலதிக நியதிகள் :
    (i) ஏதேனும் பிணையங்களுக்கான சந்தைப் பெறுமதி தீர்மானிக்கப்பட வேண்டிய வேளையில் இரு திறத்தவர்களாலும் பரஸ்பர ரீதியல் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில் பிணையங்களுக்காக இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்படும் விகிதங்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.
    (ii) முதிர்வு வருவாய்கள் / வட்டி விண்ணப்பப் பத்திரத்தில் அல்லது எமக்கு எழுத்து மூலமாக முறையாக அறிவிக்கப்பட்டுள்ள ஏதேனும் நிதிக் கணக்கில் செலவு வைக்கப்படும்.
14. உறுதிப்படுத்தலில் உள்ள பிழைகள்
    இந்த உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொண்டதிலிருந்து இரண்டு நாட்களுக்குள் உறுதிப்படுத்தல்களில் ஏதேனும் பிழைகள் இருப்பின் அவற்றை எழுத்து மூலமாக தாங்கள் எமக்கு அறிவிக்க வேண்டும்.

தொலைநகல் இல: ………………………. டெலக்ஸ் இல: ……………………………

ஆவணங்கள் தொடர்பான விபரங்களுக்கு தொலைபேசி இல: ……………………………

நன்றியுடன்,

………………………………….
வணிகருக்காக/வணிகர் சார்பாக
(வணிகரின் பெயர்) திகதி :……………………….

1st April 2015